



# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 26

## அறிவிப்புகள்

## 2022-2023

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண் - 26

## அறிவிப்புகள்
## 2022-2023

சு. முத்துசாமி
அமைச்சர்
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

## வீட்டுவசதி மற்றும்
## நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும், வழிகாட்டுதலின்படியும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் சார்பில் 33 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சு. முத்துசாமி
அமைச்சர்
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

**1. சென்னை அண்ணா பல்கலைக்கழக கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் (SAP) இளநிலை திட்டமிடல் (B.Plan) பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ரூ. 10 கோடி நிதி வழங்கும்.**

மாநிலத்தில் நகர்ப்புற திட்டமிடல் திறனை அதிகரிக்க, அண்ணா பல்கலைக்கழக கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் (SAP) இளநிலை திட்டமிடல் (B.Plan) பாடத்திட்டம் வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதற்கான நிதியை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்ககம் முறையே 80:20 என்ற விகிதத்தில் வழங்கும்.

## 2. பெருந்திரள் துரித இரயில் (MRTS) நிலையங்களில் வணிக செயல்பாடுகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும்.

பெருந்திரள் துரித இரயில் (MRTS) நிலையங்களில் தெற்கு ரயில்வேயுடன் இணைந்து வருவாய்ப் பகிர்வு அடிப்படையில் வளர்ச்சி மற்றும் வணிகச் செயல்பாடுகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership) மேற்கொள்ளும். இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை 6 மாதங்களில் தயாரிக்கப்படும்.



## 3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி), வாடகைதாரர்கள் சட்டம் 2017 மற்றும் நிறைவேற்றப்பட உள்ள தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்போர் உரிமைச்சட்டங்களையும் செயல்படுத்தும் ஒழுங்குமுறை அதிகாரம் பெற்ற வீட்டுவசதி இயக்ககம் என பெயர் மாற்றம் செய்யப்படும்.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) துறையானது கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளை செயல்படுத்தி வருகிறது. அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் விதமாக

i. தமிழ்நாடு சொத்து உரிமையாளர், வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம் 2017,

ii. நிறைவேற்றப்பட உள்ள தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்போர் உரிமைச்சட்டம்

ஆகிய சட்டங்களை செயல்படுத்தும் ஒழுங்குமுறை அதிகாரம் பெற்ற வீட்டுவசதி இயக்ககம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இத்துறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களைக் கொண்டே செயல்படுத்தப்படும்.

**4. திருமழிசை, மீஞ்சூர், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகரங்களுக்கு புது நகர் வளர்ச்சித் திட்டம் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் தயாரிக்கப்படும்.**

திருமழிசை, மீஞ்சூர், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் ஆகிய நகரங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை துணை நகரங்களாக்க சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் புது நகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படும்



**5. மதுரையிலுள்ள தோப்பூர் உச்சப்பட்டி துணை நகரத்திற்கு புது நகர் வளர்ச்சித் திட்டம், நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் தயாரிக்கப்படும்.**

நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் மதுரையிலுள்ள தோப்பூர் உச்சப்பட்டி துணை நகரத்திற்கு புது நகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்படும்.

6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருமழிசை திட்டப்பகுதியில் 16.92 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.1280 கோடி மதிப்பீட்டில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் கட்டப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருமழிசை திட்டப்பகுதியில், பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் 16.92 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 1280 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் கட்டப்படும்.



7. 60 இடங்களில், பழுதடைந்த நிலையில் உள்ள சுமார் 10,000 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் மறுகட்டுமானம் செய்யப்படும் .

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 60 இடங்களில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை குடியிருப்பு திட்டங்களில் உள்ள சுமார் 10,000 அடுக்குமாடி குடியிருப்புகள் இடிக்கப்பட்டு மறுகட்டுமானம் செய்யப்படும். மேலும், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) மேற்படி சொத்துக்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

## 8. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டி விற்கப்பட்ட குடியிருப்பு வளாகங்கள் மறுகட்டுமானம் செய்யும் பணிகளுக்கு வாரியம் துணை புரியும்.

கோயம்புத்தூரில் உள்ள சிங்காநல்லூர் மற்றும் சௌரிபாளையம், சென்னையில் உள்ள **லோட்டஸ் காலனி, பாரதிதாசன் நகர், கோல்டன் ஜூப்ளி நகர், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் தென்றல் நகர்** ஆகிய இடங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டி விற்கப்பட்ட குடியிருப்பு வளாகங்களை உரிமையாளர்களுக்கு உதவும் வகையில் மறு கட்டுமானம் செய்யும் பணிகளுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் துணை செய்யும். மேலும், இது போன்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தை அணுகும் மற்ற குடியிருப்புகளுக்கும் துணை புரியும்.



## 9. நகர்ப்புர ஏழை குடும்பங்களுக்கான வாங்கும் திறனுக்கேற்ற குடியிருப்புகளுக்கு கட்டண சலுகை வழங்கப்படும்.

ஏழை குடும்பங்கள் பயன்பெறவும் சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கவும் பட்டியலில் உள்ளவாறு கூடுதல் தளப்பரப்பு கட்டண சலுகை வழங்கப்படும்.

| தளப்பரப்பு அளவு | கூடுதல் தளப்பரப்பு குறியீடு கட்டணச் சலுகை |
|---|---|
| 400 சதுர அடி வரை | 100% |
| 401 – 500 சதுர அடி | 75% |
| 501 – 600 சதுர அடி | 50% |
| 601 – 900 சதுர அடி | 25% |

## 10. பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கான திட்ட அனுமதி வழங்கும் அதிகாரத்தினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அளித்தல்.

பன்னடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கான திட்ட அனுமதி வழங்குதலை விரைவுபடுத்தும் நோக்கத்தோடு அந்த அதிகாரத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அரசு வழங்கும்.



## 11. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மெரினா முதல் கோவளம் இடையேயான சுமார் 30 கி.மீ. நீளமுள்ள சென்னை கடற்கரை ரூ.100 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டு புத்தாக்கம் செய்யப்படும்.

மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையுடன் கலந்தாலோசித்து மெரினா முதல் கோவளம் இடையேயான சுமார் 30 கி.மீ. நீளமுள்ள கடற்கரை பகுதியில், மறுசீரமைப்பு மற்றும் புத்தாக்கப் பணிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும்.

## 12. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நீர்முனை மற்றும் ஏரிக்கரை மேம்பாடு ரூ. 100 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

பெரும்பாக்கம், ரெட்டேரி, முடிச்சூர், மாடம்பாக்கம், செம்பாக்கம், அயனம்பாக்கம், வேளச்சேரி, ஆதம்பாக்கம் மற்றும் புழல் ஆகிய ஏரிப் பகுதிகளில் மேம்பாட்டு பணிகளை ரூ.100 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நீர்வளத்துறை மற்றும் உள்ளாட்சிகளுடன் கலந்தாலோசித்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயல்படுத்தப்படும்.



## 13. சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளுக்கு தளப்பரப்பு குறியீடு (Floor Space Index) அதிகரிக்கப்படும்.

சென்னையில் பெருந்திரள் துரித இரயில் திட்ட வழித்தடங்கள், சென்னை மெட்ரோ இரயில் திட்ட வழித்தடங்கள், வெளிவட்டச் சாலை, அண்ணாசாலை, பெரியார் EVR சாலை, சென்னை-கொல்கத்தா நெடுஞ்சாலை, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை ஆகிய முக்கிய போக்குவரத்து வழித்தடங்களை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமானங்களுக்கு கூடுதல் தளப்பரப்பு குறியீடு அனுமதிக்கப்படும்.

## 14. செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூரில் புதிய பேருந்து முனையங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கட்டப்படும்.

செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூரில் புதிய பேருந்து முனையங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) கட்டப்படும்.



## 15. மாநில அளவில் நகர்ப்புற திட்ட மிடுதலுக்கென தகுதியான அலுவலர்களைக் கொண்ட தொகுப்பினை, பணி விதிகள் மற்றும் மாற்றுப்பணி நிபந்தனைகளுடன் உருவாக்கப்படும்.

திட்டமிடலில் போதிய தகுதி பெற்ற நபர்கள், நகர் மற்றும் கிராமப்புறங்களுக்கான திட்டங்கள் தயாரிப்பதற்கு அதிகம் தேவைப்படுவதாக உணரப்படுகிறது. இதனை கருத்திற்கொண்டு, மாநில அளவில் பொதுவான நகர் திட்டமிடல் பணித்தொகுப்பினை உருவாக்கி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்ககம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், நகராட்சி நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குனரகம் ஆகியவற்றில் பணியமர்த்துதல் மூலம் நகர் மற்றும் கிராமப்புறங்களுக்கு திட்டங்கள் தயாரிக்கப்படும்.

**16. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ஐ மறு ஆய்வு செய்ய அகமதாபாத்தில் உள்ள சுற்றுச் சூழல் மற்றும் திட்டமிடல் தொழில்நுட்ப மையத்தை (CEPT) கலந்தாலோசகராக நியமனம் செய்தல்.**

மாநிலத்தில் 1951 முதல் நகரமயமாதல் பன்மடங்கு அதிகரித்துள்ளது. நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்டமிடல் மற்றும் மேம்பாட்டிற்கு ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது. எனவே, நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் ஒருமித்த வளர்ச்சியை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971ஐ விரிவாக ஆய்வு செய்யவும், திருத்தங்களை பரிந்துரைக்கவும், அகமதாபாத்திலுள்ள சுற்றுச்சூழல் மற்றும் திட்டமிடல் தொழில்நுட்ப மையம் (CEPT) கலந்தாலோசகராக நியமனம் செய்யப்படும்.



**17. தமிழகத்தில் 10 இலட்சம் பேர் வசிக்கக் கூடிய நகரங்கள் அதிகரித்து வரும் நிலையில் நகரமயமாக்கலை ஒழுங்குபடுத்திட, திட்டமிட்ட நகரங்கள் அமைவதை உறுதிசெய்திட நகர வளர்ச்சிக் குழுமங்கள் திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய பகுதிகளுக்கு ஏற்படுத்தப்படும்.**

மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஓசூர் ஆகிய பகுதிகளுக்கு நகர் வளர்ச்சிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971இல் நகர்புற வளர்ச்சிக் குழுமங்கள் செயல்பட புதிய அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, இந்நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய பகுதிகளுக்கு நகர்புற வளர்ச்சிக் குழுமங்கள் ஏற்படுத்தப்படும்.

**18. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் 2.60 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ. 133 கோடி மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) ஒருங்கிணைந்த குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில், 2.60 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.133 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் கட்டப்படும். பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.



**19. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை மாவட்டம், திருவான்மியூர், சோழிங்கநல்லூர் (பழைய மாமல்லபுரம் சாலை) மற்றும் மாதவரம் ஆகிய இடங்களில் சுயநிதி திட்டத்தின் கீழ் 3.18 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 105.50 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை மாவட்டத்தின் பின்வரும் இடங்களில் அடுக்குமாடி குடியிருப்புகள் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும்.

- திருவான்மியூரில் 0.84 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.33.83 கோடி மதிப்பீட்டிலும்,
- சோழிங்கநல்லூரில், பழைய மாமல்லபுரம் சாலை அருகில் 0.37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 19.92 கோடி மதிப்பீட்டிலும்,
- மாதவரத்தில் 1.97 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 51.75 கோடி மதிப்பீட்டிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

**20. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 125 மேம்படுத்தப்பட்ட மனைகளில் ரூ. 59 கோடி மதிப்பீட்டில் பொது தனியார் கூட்டு முறையில் (Joint Venture) குடியிருப்புகள் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் 125 மேம்படுத்தப்பட்ட மனைகளில் ரூ. 59 கோடி மதிப்பீட்டில் பொது தனியார் கூட்டு முறையில் (Joint Venture) குடியிருப்புகள் கட்டப்படும்.



**21. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் சர்வீஸ் அபார்ட்மண்ட் 0.21 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில், 0.21 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் சர்வீஸ் அபார்ட்மெண்ட் கட்டப்படும்.

**22. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருவள்ளூர் மாவட்டம், அயப்பாக்கம் மற்றும் பருத்திபட்டில் ரூ. 26 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சென்னை மாவட்டம் அண்ணாநகரில் ரூ.8.37 கோடி மதிப்பீட்டிலும் அலுவலகங்களுடன் கூடிய வணிக வளாகம் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் திருவள்ளூர் மாவட்டம், அயப்பாக்கத்தில் 0.29 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.12 கோடி மதிப்பீட்டிலும், பருத்திபட்டில் 0.32 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.14 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் சென்னை மாவட்டம் அண்ணாநகரில் 0.16 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.8.37 கோடி மதிப்பீட்டிலும் அலுவலகங்களுடன் கூடிய வணிக வளாகம் கட்டப்படும். பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.



**23. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை மாவட்டம், திருமங்கலத்தில் 0.63 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில், வணிக வளாகங்கள் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சென்னை மாவட்டம், திருமங்கலத்தில் 0.63 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.50 கோடி மதிப்பீட்டில், வணிக வளாகங்கள் கட்டப்படும். பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்..

**24. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஈரோடு மாவட்டம் சம்பத் நகரில் 0.78 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் ஈரோடு மாவட்டம் சம்பத் நகரில் 0.78 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்கள் கட்டப்படும். பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) முறையில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும்.



**25. கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் AMRUT திட்டத்தின் கீழ் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 17 நகரங்கள் உட்பட 20 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்கள் இந்நிதியாண்டு இறுதிக்குள் நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் நிறைவேற்றப்படும்.**

கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் AMRUT திட்டத்தின் கீழ் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கடலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், கும்பகோணம், சேலம், வேலூர், ஆம்பூர், திருவண்ணாமலை, ராஜபாளையம், திருநெல்வேலி, காரைக்குடி, நாகர்கோவில், தூத்துக்குடி, திண்டுக்கல் மற்றும் ராமேஸ்வரம் ஆகிய 17 நகரங்கள் உட்பட 20 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்கள் இந்நிதியாண்டு இறுதிக்குள் நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் நிறைவேற்றப்படும்.

**26. நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் உதவி இயக்குநர்கள் மற்றும் கட்டடக்கலை/ திட்ட உதவியாளர்களுக்கு ரூ. 50 இலட்சத்தில் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.**

சமீபத்திய தொழில் நுட்ப முன்னேற்றங்களை பயன்படுத்தி நகரமைப்பு திட்டமிடல் உருவாக்க பல்வேறு நிலைகளிலுள்ள நகரமைப்பு அலுவலர்களுக்கு தொடர்ந்து பயிற்சி தேவைப்படுவதால், அனைத்து தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ.50 இலட்சத்தில் கட்டடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளி, அண்ணா பல்கலைக்கழகம் மூலம் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும்.



**27. மக்கள் தொகை 50,000 முதல் 99,999 வரை உள்ள 71 நகரங்களுக்கு சீரான வளர்ச்சியினை உறுதி செய்ய புவியியல் தகவல் அமைப்பின் (GIS) அடிப்படையில் முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு, நகர் ஊரமைப்பு இயக்ககத்தால் எடுத்துக் கொள்ளப்படும்.**

மக்கள் தொகை 50,000 முதல் 99,999 வரை உள்ள 71 நகரங்களுக்கு புவியியல் தகவல் அமைப்பின் (GIS) அடிப்படையில், முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும். இதன் மூலம் இந்நகரங்களில் சீரான வளர்ச்சி உறுதி செய்யப்படும்.

**28. பொதுமக்கள், கட்டடங்களுக்கான திட்ட அனுமதிகளை எளிதில் பெறும் வகையில் நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும் .**

கட்டடங்களுக்கான திட்ட அனுமதிகளை பொதுமக்கள் எளிதில் பெறும் வகையில் நகர் ஊரமைப்பு மாவட்ட அலுவலர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படும்.



**29. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் நெரிசலை குறைக்கவும் அதன் சிறந்த பயன்பாட்டினை அறியவும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

79.43 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் நெரிசலை குறைக்கவும் மறுமேம்பாட்டிற்காகவும் அதன் சிறந்த பயன்பாட்டினை அறியவும் ஒரு கலந்தாலோசகர் நியமிக்கப்படுவார். இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை 6 மாதங்களில் தயாரிக்கப்படும்.

**30. இரண்டாம் முழுமைத் திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் முன்மொழியப்பட்டுள்ள 40 சாலை விரிவாக்கப் பணிகளில் (Street Alignment) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இந்நிதியாண்டில் 10 சாலை விரிவாக்கப் பணிகள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

இரண்டாம் முழுமைத் திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி வரம்பிற்குள் முன்மொழியப்பட்டுள்ள 40 சாலை விரிவாக்கப் பணிகளில் (Street Alignment) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இந்நிதியாண்டில் 10 சாலை விரிவாக்கப் பணிகள் மாற்றத்தக்க வளர்ச்சி உரிமம் (TDR) அல்லது நிலம் கையகப்படுத்துதல் முறைகளை பயன்படுத்தி ரூ.200 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.



**31. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலுள்ள 15 ஏக்கர் மற்றும் போரூரிலுள்ள 21 ஏக்கர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.**

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலுள்ள 15 ஏக்கர் மற்றும் போரூரிலுள்ள 21 ஏக்கர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களில் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ரூ. 30 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

மேலும், இதுபோன்ற திறந்தவெளி ஒதுக்கீடு நிலங்களில், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் சுற்றுலாத் துறை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை ஆகியவற்றுடன் இணைந்தும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தும்.

## 32. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும எல்லைக்குள் வலைபின்னல் சாலை அமைப்பு ரூ. 200 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

வலைப்பின்னல் சாலைகளுக்கான திட்டமிடல், அறிவிக்கை செய்யப்பட்டு முழுமைத் திட்டங்களில் சேர்க்கப்படும். இந்நிதியாண்டில் 18 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலம் கொண்ட புதிய சாலைகள் மற்றும் ஏற்கனவே உள்ள சாலைகளை அகலப்படுத்தும் திட்டம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் ஏற்படுத்தப்படும்.



## 33. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சுமார் ரூ. 53 கோடியில் வட்டி தள்ளுபடி திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், வட்டி தள்ளுபடித் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் :

- மாதத் தவணை தொகையினை தாமதமாக செலுத்தியதற்காக விதிக்கப்பட்ட அபராத வட்டி முழுமையாகவும்,
- வட்டி முதலாக்கத்தின் மீது விதிக்கப்படும் வட்டி முழுமையாகவும்,
- நிலத்தின் இறுதி விலை வித்தியாசத்தினை செலுத்தாதற்காக கணக்கிடப்படும் வட்டியில், ஆண்டிற்கு 5 மாதத்திற்கான வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

இதன் மூலம் ஒதுக்கீடுதாரர்கள் விரைவாக விற்பனை பத்திரம் பெற்றுக்கொள்ள ஏதுவாகும்.

இத்திட்டத்திற்கான வட்டி தள்ளுபடி தொகை சுமார் ரூ.53 கோடி வீட்டுவசதி வாரியத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.